## ஒன்டாரியோவில் வாகனக் காப்புறுதி

ஆகஸ்ட் 23, 2013

### ஒன்டாரியோவில் காப்புறுதிக் கட்டணங்கள் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன

தனிப்பட்ட காப்புறுதியாளர்களால் வாகனக் காப்புறுதி விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. சாரதி அனுபவம், ஓட்டுனர் சரித்திரம், வாகனத்தின் இடமும் பாவனையும், வாகனத்தின் வகை, மற்றும் தெரிவுசெய்யப்படும் காப்புறுதியின் அளவும் தள்ளுபடிகளும் ஆகிய காரணிகளின் அடிப்படையில் இந்த விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

ஒரு நிறுவனத்தால் முன்வைக்கப்படும் விலைகள் நியாயமானதாகவும் மிக அதிகமல்லாததுமாக இருக்கவேண்டும் மற்றும் நிறுவனத்திற்கு நஷ்டம் தராதவாறு இருக்கவேண்டும் என்பதைக் கண்டறிய நிதிச் சேவைகளின் மேலதிகாரி அந்த விலைகளை மறுபார்வை செய்யவேண்டுமென்பதை சட்டம் தேவைப்படுத்துகின்றது.

ஒன்டாரியோ சாரதிகளைப் பாதுகாக்கவும், அதே வேளையில் வாகனக் காப்புறுதித் துறையில் நல்ல போட்டியை ஊக்குவிக்கவும் உதவும் முகமாக இந்த மாகாணத்தின் வாகனக் காப்புறுதியை, ஒன்டாரியோவின் நிதிச் சேவைகள் ஆணையகம் (FSCO) ஒழுங்குபடுத்துகிறது. வாகனக் காப்புறுதியாளர்கள் அனைவரும் தங்கள் விலைகளில் மாற்றங்களை FSCO வின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க வேண்டும்.

முன்வைக்கப்பட்ட விலைகள் சட்டத்திற்கும் மேற்கூறப்பட்ட நிலைமைகளுக்கும் இசைவாக இருக்கின்றதா என்பதை உறுதிசெய்ய, காப்புறுதிக் கணக்கியல் ஆதாரங்களின் அடிப்படையில் FSCO ஆனது ஆய்வுசெய்யும்.

காப்புறுதி வழங்குபவரின் முன்வைக்கப்பட்ட விலை மாற்றத்தை FSCO அங்கீகரித்ததும், இந்த புதிய கட்டணங்களை தங்கள் கொள்கைகள் புதுப்பிக்கப்படும்போது சாரதிகள் காண்பார்கள். பெரும்பான்மையான காப்புறுதிக் கொள்கைகள் வருடாவருடம் புதுப்பிக்கப்படுகின்றன.

### ஒன்டாரியோவின் நிதிச் சேவைகள் ஆணையகம் (FSCO) பற்றிய ஐந்து முக்கிய உண்மைகள்

#### 1. வாகனக் காப்புறுதி நிறுவனகள் சட்டத்தைப் பின்பற்றுவதை FSCO உறுதிப்படுத்தும்

வாகனக் காப்புறுதியைப் பொறுத்ததில் ஒன்டாரியோ சாரதிகள் பொறுப்புகளையும் உரிமைகளையும் கொண்டிருக்கிறார்கள். கட்டாய காப்புறுதி வாங்குவதற்கான பொறுப்பு மற்றும் தங்களுக்கு காப்புறுதி வழங்குபவரால் நியாயமாக நடத்தப்படுதல், கோரிக்கைகள் உரிய காலத்தில் கையாளப்படுதல், மற்றும் அவசியப்படும் பொழுது முறையீடு ஒன்றைப் பதிவுசெய்தல் ஆகிய உரிமைகளையும் இது உள்ளடக்கும். இந்த உரிமைகள் மதிக்கப்படுவதை FSCO உறுதிசெய்ய உதவும்.

#### 2. மோசடிக்காரர்களால் நுகர்வோர் எமாற்றப்படுவதைத் தவிர்ப்பதற்கு FSCO உதவும்

பல்வேறு வழிகளில் நேர்மையான நுகர்வோர் மோசடிக்காரர்களின் திட்டங்களால் ஏமாற்றப்படலாம். உதாரணத்திற்கு நேர்மையற்ற மருத்துவக் கிளினிக்குகள் ஒரு நோயாளியின் தகவலை உபயோகித்து பொய்க்கோரிக்கை ஒன்றைப் பதிவு செய்யலாம். அல்லது வாகன இழுப்பு (டோ ட்ரக்) சாரதிகள் கார் திருத்தும் கடைகளுடன் சேர்ந்து போலியான விலைச்சீட்டுக்களை தயாரிக்கலாம். இத்தகைய துஷ்பிரயோகத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க உதவும் கல்வித் தகவல்களும் குறிப்புகளும் FSCO வின் இணையத்தளத்தில் இருக்கின்றன.

வாகன இழுப்பு சாரதிகள், வாகனம் திருத்தும் சேவைகள், வாகனத் தரிப்புச் சேவைகள், சட்ட சேவைகளை வழங்காத சட்ட ஆலோசகர்கள் மற்றும் வாகனக் காப்புறுதி பலன் கோருபவர்களிடம் பரிந்துரை விலை (ரெஃபரல் ஃபீ) ஒன்றைக் கேட்கும் மருத்துவக் கிளினிக்குகள் ஆகியவற்றிற்கு எதிராக FSCO நடவடிக்கை எடுக்கலாம்

அத்துடன், சந்தேகத்திற்கிடமான வாகனக் காப்புறுதி மோசடிகளை அறிக்கைசெய்வதற்காக, நுகர்வோருக்கென தனியான ஒரு தொலைபேசி சேவையையும் (ஹொட் லைன்) FSCO கொண்டுள்ளது. 24 மணிநேரமும், வாரத்தில் 7 நாட்களும் நேரடியான இணைப்பின் மூலம் சந்தேகத்திற்கு இடமான வாகனக் காப்புறுதி மோசடிகளை இப்போது மக்கள் அறிக்கைசெய்யலாம். இது இலகுவானது மற்றும் துரிதமானது. FSCO வின் வலைப்பக்கமாகிய www.fsco.gov.on.ca/TipNow, மற்றும் 1-855-5TIP-NOW என்ற தொலைபேசி இலக்கத்தில் இந்த ஹொட் லைன் கிடைக்கப்பெறுகிறது.

3. **சிறந்த வாகனக் காப்புறுதிக் கட்டணங்களை கண்டுபிடிப்பதற்கான குறிப்புகளை FSCO சாரதிகளுக்கு வழங்கும்**

வாகனக் காப்புறுதியில் பணத்தைச் சேமிப்பதற்கான வழிகள் பற்றி நுகர்வோருக்கு கல்விபுகட்ட FSCO உதவுகிறது. தங்களது இணையத்தளம், சோசியல் மீடீயா மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மூலம், மிகச் சிறந்த காப்புறுதி விலைகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவும் குறிப்புக்களை FSCO பகிர்ந்துகொள்கிறது.

இவை பின்வருவனவற்றைப் போன்ற குறிப்புகளை உட்படுத்துகின்றன:

- ஒரு நல்ல சாரதி வரலாற்றை நிறுவுதல் – இது கவனமாக வாகனம் ஓட்டுவதையும் சாலைச் சட்டங்களுக்கு கீழ்ப்படிவதையும் குறிக்கும்.
- காப்புறுதியைக் கவனமாகத் தெரிவுசெய்தல் – உதாரணமாக குறைந்த விலையுள்ள ஒரு வாகனத்திற்கு மோதல் (கொலிஷன்) மற்றும்/அல்லது விரிவான (கொம்ப்ரிஹென்சிவ்) காப்புறுதிகளை வாங்குவது பயனுள்ளதாக இருக்காது.
- கட்டணங்களை சரியான நேரத்தில் செலுத்துதல் – கட்டத் தவறுதல் சாரதியின் காப்புறுதிக் கொள்கை ஒன்றை ரத்துசெய்வதில் விளைவடையலாம். இது இரண்டிற்கும் மேற்பட்ட தடவைகள் நடந்தால், காப்புறுதியை மீண்டும் வாங்குவதற்கு அதிக செல்வாகலாம்.
- வீட்டுக் காப்புறுதியை வாகனக் காப்புறுதியோடு இணைத்தல்.
- தேவைப்படும் இடங்களில் வின்டர் டயர்களை உபயோகித்தல் – சில காப்புறுதி நிறுவனங்கள் தள்ளுபடிகளை வழங்குகின்றன.
- எல்லா வாகனங்களையும் ஒரே நிறுவனத்தில் காப்புறுதிசெய்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட சாரதி பயிற்சித் திட்டமொன்றை நிறைவுசெய்தல்.

4. **சாரதிகள் தங்களுக்கு காப்புறுதி வழங்குவோருடனான சர்ச்சைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு FSCO உதவும்**

மக்கள் வாகன விபத்துகளில் காயமடையும்போது அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய விபத்து நலன்கள் விடயத்தில் காப்புறுதியாளர் இணக்கம் தெரிவிக்காதபோது, காப்புறுதிச் சட்டத்தின் பிரகாரம் மீடியேஷன் மற்றும் ஆர்பிட்ரேஷன் சேவைகள் மூலம் நீதி மன்றத்திற்குச் செல்லாமல் உரிய நேரத்தில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண FSCO உதவும்.

5. **விலைகளை நியாயமானதாக் வைத்துக்கொள்ள FSCO உதவும்**

அனைத்து காப்புறுதிக் நிறுவனங்களின் விலைகளையும், இந்தத் துறையில் பாவனைக்கு வருவதற்கு முன்னதாகவே FSCO அங்கீகரிக்கும். விலைகள் நீதியாகவும் நியாயமாகவும் ஆபத்துக்களை சரியான முறையில் பிரதிபலிப்பதாகவும் இருக்கவேண்டும்.

---

ஊடக விசாரிப்புகளுக்கு மாத்திரம்:
Andrew Chornenky, அமைச்சரின் அலுவலகம்,(Minister's Office) 416-325-8679
Marc Pichette, நிதி அமைச்சு, (Ministry of Finance) 416-314-1587
**பொதுசன விசாரிப்புகளுக்கு 1-800-337-7222 ஐ அழையுங்கள்**
(ஒன்டாரியோவில் மட்டும் இலவசம்)